டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 26.08.2026 புதன்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 057 - Madurai | Online Edition

## சென்னை ஐஐடி-யில் கெம்கனெக்ட் 2026

# தொழில்துறை, கல்வித்துறை சார்ந்த நிகழ்வு நடைபெறுகிறது

சென்னை, ஆக.25

சென்னை ஐஐடி-யில் கெம்கனெக்ட் 2026 என்ற தலைப்பில் தொழில்துறை, கல்வித்துறை சார்ந்த ஒருநாள் நிகழ்வு இன்று (26.08.26) நடைபெறுகிறது.

ரசாயனம், பெட்ரோ கெமிக்கல்ஸ் துறையால் நிறுவப்பட்ட சிறந்து விளங்கும் 18 மையங்களின் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில், ரசாயனம், பெட்ரோ கெமிக்கல்ஸ் துறை, சென்னை தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி) இணைந்து இதற்கு ஏற்பாடு செய்துள்ளன.

இந்நிகழ்வு ரசாயனம், பெட்ரோ கெமிக்கல்ஸ் துறையின் சிறப்பு மையங்களின் புதுமைக் கண்டுபிடிப்புகளை வர்த்தகமயமாக்கத் தயாராக உள்ள நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து, உத்திசார் கூட்டாண்மைகளை எதிர்நோக்கியுள்ள தொழில்துறை தலைவர்கள், புத்தொழில் நிறுவனங்கள், குறு சிறு நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில் காப்பகங்கள், முதலீட்டாளர்கள் ஆகியோருக்கு ஒரு தளத்தை அளிக்கும்.

இந்நிகழ்வில் ரசாயனம், பெட்ரோ கெமிக்கல்ஸ் துறையின் வேதிப் பொருட்கள், பெட்ரோ கெமிக்கல்ஸ் துறையின் சிறப்பு மையங்களை அமைத்தல் என்ற திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள தொழில் நுட்பங்கள், முன்மாதிரிகள், காப்புரிமைகள் ஆகியவை காட்சிப் படுத்தப்படும். சிறப்பு மையங்களைச் சேர்ந்த முதன்மை ஆய் வாளர்கள் தங்களுடைய பணிகளை அதற்கான அரங்குகளில் காட்சிப்படுத்த உள்ளனர். அத்துடன் கூட்டு முயற்சி, உரிமம் பெறுதல், தொழில்நுட்ப பரிமாற்றம் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை ஆராய்வதற்காகத் தொழில்துறை பிரதிநிதிகளுடன் நேரடியாக உரையாட உள்ளனர்.

# வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஒரு நாள் கோழி வளர்ப்பு பயிற்சி




மதுரை, ஆக.25

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஒரு நாள் கோழி வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கி.சுரேஷ், துவக்கி வைத்து பேசுகையில் நாட்டுக்கோழி வளர்ப்பு அனைத்து காலங்களிலும் வருமானம் கொடுக்கும் தொழில் ஆகும், இதைப் பகுதி நேரமாக செய்தால் கூட மாதம் ரூ.6000 முதல் 8000 வரை வருமானம் பெறலாம் என்று கூறினார். வேளாண்மை அறிவியல் நிலைய கால்நடை மருத்துவர் முனைவர் செ.சரவணன், கோழி வளர்ப்பின் முக்கியத்துவம், உற்பத்தி, ரகங்கள் தீவன மற்றும் நோய் மேலாண்மை குறித்து விரிவாக எடுத்துரைத்தார். திண்டுக்கல் கால்நடை பயிற்சி மைய தலைவர் முனைவர் M.S.முருகன், கோழிகளில் நோய் தடுப்பு மற்றும் கோழி வளர்ப்பு, தொழில் துவங்க வங்கிக் கடன் பெறும் முறைகள் குறித்து விரிவாக விளக்கிக் கூறினார். முனைவர் கி.ஜோதிலட்சுமி, கோழி மற்றும் முட்டையின் சத்துக்கள் தினமும் அதை உணவில் ஒரு பகுதியாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். இந்த பயிற்சியின் ஒரு அங்க மாக மதுரை வேளாண்மை கல்லூரி MABIFல் செயல்படும் தீவன உற்பத்தி ஆலைக்குச் சென்று தீவனம் தயாரிக்கும் முறைகள் குறித்து செயல் விளக்கும் கொடுக்கப்பட்டது. இப்பயிற்சியில் விருதுநகர், சிவகங்கை, திண்டுக்கல், திருச்சி மற்றும் மதுரை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இப்பயிற்சி நிறைவில் பங்கு பெற்ற விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு பங்கு பெற்றதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விவசாயிகளுக்கு மதிப்பு கூட்டல் பயிற்சி!



சேலம், ஆக.25

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், புளியங்குறிச்சி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ‘அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டுதல் தொழில் நுட்பங்கள்‘ குறித்த சிறப்புப் பயிற்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

சேலம் மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் அருணா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அவர்கள் விவசாயிகளுக்கு அடையாள எண் பதிவு செய்தலின் அவசியம் மற்றும் சமச்சீர் உரம் மேலாண்மையில் உயிர் உரங்கள், மண்புழு உரங்கள் மற்றும் நானோ யூரியா பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன், இயற்கை விவசாயத்தின் நன்மைகள் குறித்து எடுத்துரைத்தார். இப்பயிற்சியில், மக்காச்சோளம் மற்றும் காய்கறி பயிர்களில் மதிப்பு கூட்டுதல் முறைகள் குறித்து பயிற்சியாளர் பிரவீன் விளக்க மளித்தார். மேலும், வேளாண்மை அலுவலர் சுரேந்தர், விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருட்களைச் சந்தைப் படுத்தும் வழிகள் மற்றும் உழவர் சந்தையில் உறுப்பினர் ஆவதற் கான வழிமுறைகள் குறித்து விவரித்தார். வேளாண் வணிகத் துறையின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் குறித்து உதவி வேளாண்மை அலுவலர் வித்யா விவசாயிகளுக்கு விளக்கினார்.

உதவி வேளாண்மை அலுவலர் ரவிக்குமார், நெல், நிலக்கடலை, உளுந்து, துவரை மற்றும் ஆமணக்கு போன்ற பயிர் களுக்கான உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் மற்றும் அரசுத் திட்டங்கள் குறித்துப் பேசினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி வறட்சி மேலாண்மை தொழில்நுட்பமான பி.பி.எப்.எம் (PPFM) பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு வயல் வெளியில் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. அட்மா திட்டத்தின் செயல் பாடுகள் குறித்து உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேலும், உழவர் உற்பத்தியாளர் குழுவின் செயல்பாடுகள் குறித்து அதன் முதன்மை செயலாளர் அரவிந்தும் விளக்கிப் பேசினர். பயிற்சியில் அப்பகுதியைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் ஆர்வமுடன் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**22. ஆட்டுக்கால் சூப்**

**தேவையான பொருட்கள்**

ஆட்டுக்கால் — 2

இஞ்சி

பூண்டு

மிளகு

சீரகம்

உப்பு – இவையனைத்தும் தேவையான அளவு

**செய்முறை**

குக்கரில் நன்றாக வேக வைத்து வடிகட்டி பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை (INM) மற்றும் அதன் மூலம் ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல் குறித்த பயிற்சி




மதுரை, ஆக.25

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை ATMA 2026-27 ஆம் ஆண்டு வேடர் புளியங்குளம் கிராமத்தில் Integrated Nutrient Management (INM) & Reduction of Chemical Fertilizer through INM ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை (INM) மற்றும் அதன் மூலம் ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம், தலைமையில் நடைபெற்றது.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை என்பது இயற்கை உரங்கள் இரசாயன உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பயன்படுத்தும் ஒரு நிலையான வேளாண்மை நடைமுறையாகும். இது மண் வளத்தை அதிகரித்து பயிர் உற்பத்தியை மேம்படுத்த உதவுகிறது. ஞூஹினி இன் முக்கிய நோக்கம் நீண்டகால மண் ஆரோக்கியத்தை பாதுகாத்து சமநிலை தாவர ஊட்டச்சத்தை வழங்குவதுடன் சுற்றுச்சூழல் பாதிப்பை குறைப்பது ஆகும். இது நவீன வேளாண்மை இயற்கை விவசாயம் மற்றும் நிலையான பயிர் உற்பத்தி முறைகளில் அதிக மகசூலும் வளங்களின் திறமையான பயன்பாட்டையும் அடைய பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையின் அடிப்படை கோட்பாடு பண்ணைச் சானம் வெர்மி கம்போஸ்ட் பச்சை உரம் பயிர் மீதமுள்ள கழிவுகள் உயிர் உரங்கள் மற்றும் ரசாயன உரங்கள் போன்ற பல்வேறு ஊட்டச்சத்து மூலங்களை சரியான முறையிலும் மற்றும் ஒருங்கிணைந்த பயன்படுத்துவதாகும் இந்த ஒருங்கிணைந்த முறை அணுகுமுறை நைட்ரஜன் பாஸ்பரஸ் பொட்டாசியம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் ஆகியவற்றை பயிர்

களின் தேவைக்கேற்ப சரியான அளவிலும் சரியான நேரத் திலும் வழங்குகிறது என்பன குறித்து பயிற்சி அளித்தார்கள். வேளாண்மை அலுவலர் அருள் நவமணி விஜய பாரதி, INM நடைமுறைகள் மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துகின்றன. மண் உயிர்சத்து கார்பனை அதிகரிக்கின்றன. நுண்ணுயிர் செயல் பாட்டை ஊக்கு விக்கின்றன மற்றும் ஊட்டச்சத்து சுழற்சியை மேம்படுத்துகின்றன.

இயற்கை உள்ளீடுகள் மண் ஆரோக்கியத்தையும் நீர் தாங்கும் திறனையும் உயர்த்துகின்றன. அதே நேரத்தில் ரசாயன உரங்கள் உடனடி ஊட்டச்சத்து கிடைப்பை வழங்குகின்றன உயிர் உரங்கள் ஊட்டச்சத்துக்களின் கரையக்கூடிய தன்மையையும் உயிரியல் நைட்ரஜன் நிலை நிறுத்தத்தையும் அதிகரிக்கின்றன என்றும் எடுத்துக் கூறினர்.

வேளாண் விரிவுரையாளர் ஓய்வு ஞான அருள்வேல் சாமுவேல் ராஜா, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை அதிக அளவில் ரசாயன உரங்களின் மீது சார்ந்து இருப்பதை குறைக்க உதவுகிறது. இதனால் உற்பத்திச் செலவுகள் குறைகின்றன மற்றும் மண் உப்பு சேர்த்தல் ஊட்டச்சத்து மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு போன்ற அபாயங்கள் தடுக்கப்படுகின்றன.

இது பயிர்களின் கருத்தை மேம்படுத்தி அழுத்த நிலைகளை தாங்கும் உயர்த்தி சுற்றுச்சூழல் சமநிலையை பேணும் வகையில் நிலையான வேளாண்மை ஆதரிக்கின்றது, நிலையான வேளாண்மை மண்ணை ஆரோக்கியத்தை மேலாண்மை மற்றும் இரசாயன மற்றும் பயிர் உற்பத்தி மீது அதிகரித்து வரும் கவனத்தின் காரணமாக ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை நவீன வேளாண்மை முறைகளின் முக்கியமான தந்திரமாக உருவெடுத்து உள்ளது. இதன் முழுமையான அணுகுமுறை நீண்டகால மண் வளம் மேம்பட்ட பயிர் உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை உறுதி செய்கின்றது.

இதனால் சமநிலை மற்றும் பொறுப்பான வேளாண்மை நடைமுறைகளின் அவசியமான ஊராக விளங்குகின்றது. சமச்சீரான உரப்பயன் பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலை யான வேளாண்மையை ஊக்குவித்தல் மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் குறித்தும் செயல் விளக்கத்துடன் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

துணை வேளாண்மை ஈசா மண் காப்போம் இயக்கம் மதுரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அருண்குமார் மல்லிகை மற்றும் நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து இயற்கை வேளாண்மை குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

வேடர் புளியங்குளம் கிராமம் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

இம்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சிக்கு விவசாயிகள் மற்றும் செயல் விளக்கம் அமைப்பினை தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர் மற்றும் மகாலட்சுமி செய்திருந்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து வட்டார தொழில் நுட்ப மேலாளர் லதா முகவுரை மற்றும் நன்றியுரை வழங்கினார்.

# மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# மரங்களைச் சுற்றி கற்றாழை வளர்ப்பு – நீர் சேமிப்பிற்கான இயற்கை வழிமுறை



திண்டுக்கல், ஆக.25

இன்றைய வேளாண்மையில் நீர்ப் பற்றாக்குறை முக்கிய சவாலாக உள்ளது. குறிப்பாக மழை குறைவாக இருக்கும் காலங்களில் பயிர்களுக்கும் மரங் களுக்கும் தேவையான ஈரப்பதத்தை மண்ணில் பாதுகாப்பது மிகவும் அவசியம். இதற்காக மரங்களைச் சுற்றி உள்ள காலி இடங்களில் கற்றாழை (Aloe vera) போன்ற குறைந்த நீர்த் தேவை கொண்ட தாவரங்களை வளர்ப்பது ஒரு பயனுள்ள அணுகுமுறையாக அமையலாம்.

கற்றாழை வறட்சியைத் தாங்கக்கூடிய மருத்துவத் தாவர மாகும். கற்றாழைக்கு நீர்த் தேவை குறைவாக இருப்பதால் வறண்ட மற்றும் அரை வறண்ட பகுதிகளிலும் இதனை வளர்க்க முடியும். இது மழைநீரை மட்டுமே பயன்படுத்தி வளர்க்கக்கூடிய பயிராகவும், தேவையான நேரங்களில் குறைந்த அளவு பாசனத்துடனும் வளர்க்கக்கூடியதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மரங்களைச் சுற்றி கற்றாழையை வளர்க்கும்போது, மண்ணின் மேற்பரப்பு முழுமையாக வெறுமையாக இருப்பதைத் தவிர்க்க முடியும். தாவர மூடாக்கம் மற்றும் கரிமப் பொருட் களைப் பயன்படுத்துவது மண்ணிலிருந்து நீர் ஆவியாகி வெளியேறுவதை குறைக்க உதவுகிறது. தோட்டக்கலை வழி காட்டுதலிலும், மரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் மூடாக்கம் செய்வதன் முக்கிய நோக்கம் மண் ஈரப்பதத்தைப் பாதுகாப்பதும் களைகளை கட்டுப்படுத்துவதும் என குறிப்பிடப்படுகிறது.

மேலும், மரங்களைச் சுற்றி சிறிய வட்டப் பாத்தி அல்லது நீர் சேகரிக்கும் அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் மழைநீர் மரத்தின் வேர் பகுதியில் தங்கி மண்ணுக்குள் ஊடுருவுவதற்கு வாய்ப்பு ஏற்படும். மண் மற்றும் நீர் பாதுகாப்பு வழிகாட்டுதலின்படி, மரங்களைச் சுற்றியுள்ள micro-catchment அமைப்புகள் மழைநீரை அந்த இடத்திலேயே சேமித்து மரங்களின் வளர்ச்சிக்கு உதவுகின்றன.

கற்றாழை அதிக நீரைத் தேவைப்படுத்தாததால், நீர் குறைவாகக் கிடைக்கும் பகுதிகளில் மரங்களுடன் இணைந்து வளர்ப்பதற்கான ஒரு சாத்தியமான துணைப் பயிராகக் கருதலாம். இருப்பினும், கற்றாழை நீர் தேங்கும் நிலத்தை விரும்பாது என்பதால், மரத்தின் அடிப்பகுதியில் நீர் தேங்காதவாறு நல்ல வடிகால் வசதி இருப்பதை உறுதி செய்கிறது.

தகவல் : ***மௌனிகா, ஹஸ்வத்தா பத்மராஜ், அருந்ததி, கவிதாஞ்சலி, ஹர்ஷினி, ஹரிணி, நான்காம் ஆண்டு மாணவர்கள், வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளி, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.***

# ஒருங்கிணைந்த பண்ணையம் விவசாயிகள் பயிற்சி



சேலம், ஆக.25

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணையம் விவசாயிகள் பயிற்சி தெடாவூர் வடக்கு கிராமத்தில் நடைபெற்றது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் அற்புத வேலன் வரவேற்று உழவன் செயலியின் நன்மைகள் மற்றும் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்பு பற்றி கூறினார். வேளாண்மை உதவி இயக்குநர் மோகன சரிதா தலைமையேற்று நாட்டு கோழி வளர்ப்பு, அசோலா வளர்ப்பு முறைகளை எடுத்து கூறினார். தெடாவூர் கால்நடை மருத்துவர் நடராஜன் கலந்து கொண்டு பால் உற்பத்தி உயிர்வாயு உற்பத்தி முறைகளை விரிவாக எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் மணிமாறன் கலந்து கொண்டு துறைசார்ந்த திட்டங்கள் மற்றும் மண்புழு உற்பத்தி முறைகள் மற்றும் தரிசு நிலங்களில் ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளை எடுத்துரைத்தார் மற்றும் வேளாண் விற்பனை வணிகம் உதவி வேளாண்மை அலுவலர் சுரேஷ் கலந்து கொண்டு ஒழுங்கு முறை விற்பனை கூடத்தின் நன்மைகளையும் மின்னனு ஏல முறைகளை எடுத்து கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் பிரபா பஞ்சகாவியா, மீன் அமிலம் தயரிக்கும் முறைகளை கூறினார். நிகழ்சிக்கான ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர் சங்கர் செய்திருந்தார்.

# இப்கோ நானோ விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாம்



சேலம், ஆக.25

சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (JDA) அலுவலகத்தில், இப்கோ சார்பில் சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 4 மாவட்டங்களைச் சேர்ந்த வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கான இப்கோ நானோ விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாம் நடைபெற்றது.ருஇப்பயிற்சியில் சேலம் மாவட்ட உரத் தரக் கட்டுப்பாட்டு அலுவலர் கவிதா, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இதில் 50-க்கும் மேற்பட்ட வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி அப்துல் ரஹ்மான், இப்கோவின் நானோ உரங்களான நானோ யூரியா, நானோ டிஏபி, நானோ காப்பர், நானோ ஜிங்க் மற்றும் சாகரிகா திரவ உரங்கள் ஆகியவற்றின் பயன்படுத்தும் முறை, செயல்பாடு மற்றும் நன்மைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும், பயிர் மகசூலை அதிகரித்தல், மண் வளத்தைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் உரப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றில் நானோ உரங்களின் பங்கு குறித்தும் விளக்கினார்.

பங்கேற்ற அனைத்து வேளாண்மை அலுவலர்களும், இப்கோ நானோ உரங்களின் பயன்கள் மற்றும் பயன்பாட்டு முறைகள் குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவற்றை விவசாயிகளுக்கு கொண்டு சேர்ப்போம் என்று தெரிவித்தனர்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பிரண்டை சாகுபடி - ஒரு பார்வை



பிரண்டை ஒரு மருத்துவ குணமுள்ள மூலிகை பயிராகும். இது மிகக் குறைந்த பாரமரிப்பு, அதிக வறட்சியை தாங்கி வளரக்கூடியது. இதனுடைய அறிவியல் பெயர் (CISSUS QUADRANGULARIS) அனைத்து மண் வகைகளிலும் இதனை சாகுபடி செய்யலாம். போதிய மழையின்மை, வறட்சி, வெப்ப மான சூழ்நிலையில் இது சிறப்பாக வளரும். விவசாயத்தில் நல்ல லாபம் இல்லை என கைவிட்ட விவசாயிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக கருதப்படுகிறது. இதனை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி விற்பனை செய்தால் கூடுதலான வருமானம் கிடைக்க வாய்ப்பு.

**சாகுபடி முறை**

இதில் இரண்டு வகை பிரண்டை உண்டு.

1) உருண்டை வடிவ பிரண்டை
2) தட்டை வடிவ பிரண்டை

இதனை மழைக்காலம் தொடங்கும் முன் நடவு செய்யலாம். பிரண்டையின் கணுக்கள் உள்ள தண்டுகளை வெட்டி நேரடியாக மண்ணில் நடவேண்டும். செடிகளை வேலி ஓரங்களில் நட்டால் படருவது எளிதாகும். தனியாக நட்டால் பிரண்டை கொடி படர்வதற்கு பந்தல் அமைக்க வேண்டும். தண்டுகள் 6-8 அங்குல நீளத்தில் இருந்தால் நடவு செய்ய எளிதாகும்.

**உரம்**

மக்கிய தொழு உரம் மற்றும் பிண்ணாக்கு கரைசலை இடலாம். பூச்சி/ நோய் தாக்குதல் அவ்வளவாக இருக்காது. நட்ட சில மாதங்களில் அறுவடைக்கு தயாரிக்கி விடும். இளந் தண்டுகள் உடனடியாக வெட்டி மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக (பிரண்டை துவையல், பொடி, தொக்கு) மாற்றி விற்பனை

செய்யலாம். மழை இல்லாத காலங்களில் ஓரளவு நீர்ப்பாசன வசதி செய்தால் செடிகள் வேகமாக வளரும். ஒரு முறை நடவு செய்தால் 5 ஆண்டுகள் வரை மகசூல் எடுக்கலாம். எலும்பு மூட்டு சம்மந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு அரு மருந்தாக உள்ளது. பிரண்டை தற்போது ஒரு கிலோ 20 முதல் 50 வரை விற்பனை செய்யபடுகிறது. இதனை ஆடு, மாடு ஆண்டாது.

**பிரண்டையில் உள்ள சத்துகள்?**

கால்சியம் ஆக்சிலேட் வடிவில் (100 கிராம் தண்டில் 267 கிராம்) உள்ளது. கரோடின் சி ஊட்டசத்து, ஆஸ்கார்பிக் ஆசிட் வடிவில் 100 கிராம் தண்டில் 398 மி.கி என்றளவில் நார்சத்து அமினோ அமிலங்கள் உள்ளன. இந்த வறட்சியான கால கட்டத்தில் விவசாயிகளின் வாழ்வாதாரமாக இந்த பிரண்டை சாகுபடி குறைந்த அளவில் செய்யலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# சிப்பி மற்றும் பால் காளான் உற்பத்தியாளர் சந்திப்பு நடந்தது




ஈரோடு, ஆக.25 OMAI (oyester and Milky agri innovation) தமிழ்நாடு மாநில அளவிலான சிப்பி மற்றும் பால் காளான் உற்பத்தியாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சி 22/08/26 அன்று ஈரோடு மாவட்டம், கோபி ICAR KVK myrada கோபிச் செட்டிப்பாளையத்தில் நடைபெற்றது.

இதில் ICAR முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் டாக்டர் அழகேசன், OMAI ஒருங் கிணைப்பாளர்கள் லோகநாதன், ஜான், டாக்டர் கோவிந்தராஜன், சரவணன் மற்றும் நிர்வாகிகள் கொங்கு காளான் செந்தில்ராம், டாக்டர் நரசிம்மன், டாக்டர் சந்திரசேகர், பிரசன்னா, அழகப்பன் மற்றும் 70க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர். கோவை நந்தகுமார் நன்றி உரையாற்றினார்.

# மகளிர் சுய உதவி குழுவிற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது



திருச்சி, ஆக.25

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டாரம், ஆதிகுடி கிராமத்தில் மகளிர் சுய உதவி குழுவிற்கான திறன் மேம்பாடு பயிற்சி நடைபெற்றது. இதில் வேளாண்மை உதவி இயக்குனர் சத்யபிரியா, கலந்து கொண்டு இயற்கை இடு பொருள்கள் பயன்படுத்தி ரசாயன உரத்தின் பயன்பாட்டினை குறைத்து நஞ்சிலா உணவு உற்பத்திய பெருக்க வேண்டும் என விவசாயிகளிடம் கேட்டுக் கொண்டார். சாரல் வாழ்வு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திலிருந்து ஹரி கிருஷ்ணன் வருகை தந்து விவசாயிகளுக்கு பஞ்சகவியம், ஜீவாமிர்தம், மீன் அமிலம் கரைசல் தயார் செய்தல், கன ஜீவாமிர்தம், ஹுமிக் அமிலம், மூலிகை பூச்சி விரட்டி தயார் செய்தல் பற்றி மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு 5 liter பஞ்சகவ்யம் தயாரித்தல், தேவையான பொருட்களின் அளவைக் குறைத்து 5 லிட்டர் அல்லது சிறிய அளவில் பஞ்சகவ்யம் தயாரிக்க, 1 கிலோ நாட்டு மாட்டு சாணம், 100 மில்லி நெய், மற்றும் அதற்கேற்ப மற்ற பொருட்களைச் சேர்த்து எளிய முறையில் தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள் (சிறிய அளவு) :** நாட்டுப் பசு மாட்டுச் சாணம் – 1 கிலோ, நாட்டுப் பசு மாட்டு நெய் – 100 மில்லி, நாட்டு மாட்டுத் கோமியம்– 600 மில்லி, நாட்டுப் பசு பால் – 400 மில்லி, நாட்டுப் பசு தயிர் – 400 மில்லி, கரும்பு வெல்லம் – 200 கிராம் (அல்லது கரும்புச்சாறு 400 மில்லி) நன்கு கனிந்த வாழைப்பழம் – 2 முதல் 3, இளநீர் – 600 மில்லி, தண்ணீர் – 600 மில்லி.

**தயாரிக்கும் முறை : முதல் படி (நாட்கள் 1 முதல் 4) :** ஒரு அகலமான பிளாஸ்டிக் பாத்திரம் அல்லது மண் பானையை எடுத்துக் கொள்ளவும்.1 கிலோ சாணம் மற்றும் 100 மில்லி உருக்கிய நெய் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து நன்கு பிசையவும். இதனை பாத்திரத்தில் வைத்து, பூச்சிகள் வராமல் இருக்க ஒரு மெல்லிய துணியால் மூடி நிழலில் வைக்கவும். தினமும் ஒரு முறை இதைக் கலக்கி விட வேண்டும்.

**இரண்டாம் படி (ஐந்தாம் நாள்) :** 5–வது நாளில் கோமியம், பால், தயிர், வெல்லம், இளநீர், தண்ணீர் மற்றும் மசித்த வாழைப்

பழங்களைச் சர்க்கவும். அனைத்தையும் ஒன்றாக மரக்கட்டை யால் நன்கு கலக்கிவிடவும்.

**மூன்றாம் படி (நொதித்தல் காலம்) :** அடுத்த 15 முதல் 20 நாட்களுக்கு தினமும் காலை, மாலை இரு வேளைகளில் கலவையை நன்றாகக் கலக்கி விட வேண்டும்.பாத்திரத்தின் வாயை எப்போதும் ஒரு வலைத் துணி அல்லது காற்றில்லா துணியால் மூடியிருக்க வேண்டும்.20 முதல் 30 நாட்களில் நறுமணத்துடன் கூடிய தரமான பஞ்சகவ்யம் தயாராகிவிடும். செயல் விளக்கமாக செய்து காண்பித்தார். இதற்கான ஏற்பாட்டினை வட்டார தொழில் நுட்ப மேலாளர் சபரிசெல்வன், உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் ஆகியோர் செய்து இருந்தனர்.




# சேலை கிராமம் விவசாயிகளுக்கு மண்வள மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

திருவள்ளூர், ஆக.25

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டாரம் வேளாண்மை துறை வேளாண்மை துறையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா மாநில விரிவாக்கத் திட்டங் களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் உள்ள சேலை கிராமத்தைச் சார்ந்த 40 விவசாயிகளுக்கு மண்வள மேலாண்மை என்ற தலைப்பில் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக்கு வேளாண்மை அறிவியல் நிலையம் பண்ணை மேலாளர் நக்கீரன் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கலைச்செல்வி தலைமை தாங்கி பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார். மற்றும் நம்ம வயல் செயலி பயன்படுத்தும் முறையை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். (1) விவசாயிகள் தங்கள் பயிர் விவரங்களை நம்ம வயல் செயலி மூலம் தாங்களே ஆன்லைன் பதிவு செய்ய லாம் (2) அடங்களுக்காக கிராம நிர்வாக அலுவலராக அணுகல் தேவையில்லை செயல்முறை எளிதாக்கப்படுகிறது. (3) அடங்கல் அரசு சேவைகள், விவசாய கடன், பயிர் காப்பீட்டு பெற அத்தியாவசியமானது எப்படி பதிவேற்றம் செய்யலாம் என்ற விவசாயிகளுக்கு அறிக்கை வயலில் பதிவேற்ற செய்து காண்பிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சிக்கு திரூர் குப்பம் வேளாண்மை அறிவியல் நிலையம் நக்கீரன் பேசுகையில் மண்வள மேலாண்மை என்பது மண்ணின் தரம், ஊட்டச்சத்துக்கள், மற்றும் ஈரப்பதத்தை பாதுகாத்து, நீண்ட கால விவசாய உற்பத்தியை மேம்படுத்தும் முறையாகும். இது அரிப்பைத் தடுத்து உகந்த பயிர் வளர்ச்சியை உறுதி செய்கிறது.

**முக்கிய முறைகள்**

1.மண் பரிசோதனை மண்ணில் உள்ள சத்துக்களை அறிய முறையான மண் மாதிரி சேகரிப்பு.

**2.கரிம உரம் பயன்பாடு**

மக்கிய தொழு உரம் மற்றும் மண்புழு உரம் சேர்த்து மண்ணின் கரிம பொருள் அளவை உயர்த்துவது.

**3.பயிர் சுழற்சி**

ஒரே பயிரை தொடர்ந்து நடாமல் மாற்றிச் சாகுபடி செய்து ஊட்டச்சத்து மேலாண்மை சமநிலையைப் பேணுவது

**4.நீர் மேலாண்மை**

தேவையற்ற நீர்ப்பாசனத்தை தவிர்த்து, சரியான நீர் வடிகால் மற்றும் ஈரப்பதத்தை நிர்வாகிப்பது.

**5.மண் பாதுகாப்பு**

ஏர் உழவு மற்றும் விளிம்பு பயிரிடல் மூலம் மண் அரிப்பை தடுத்தல்.

மேற்கூறிய கருத்துக்கள் மண் வள மேம்பாட்டில் அங்ககப் பொருட்களின் முக்கியத்துவத்தை தெரிவிக்கின்றன.

இந்த அங்கக் பொருட்களை தொழு உரம், கம்போஸ்ட், பசுந்தாள்உரம், பசுந்தழை உரம், கரும்பாலை கழிவு, தென்னை நார் கழிவு, மண்புழு உரம் போன்றவற்றின் மூலம் நிலத்திற்கு அளிக்க முடியும்.

இந்த அங்கக உரங்களில் ஏதாவது பொருட் களை இடுவதால் பயிர் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா நுன்னூட்டச் சத்துகளும், நொதிகளும், ஹார்மோன்களும் தேவையான அளவுகளில் கிடைப்பதோடு மண்ணின் பௌதீக, ரசாயன மற்றும் உயிரியல் பண்புகள் மேம்பட்டு மண் பக்குவப்பட்டு மண்வளம் மேம்படும்.

மேலும் பாசன நீர் மற்றும் உரம் முதலிய இடு பொருள்களின் சிக்கனம் செய்ய முடியும். மேலும் மண்ணின் உற்பத்தி திறன் உயர்ந்து பயிர் மகசூல் பெருக்கமும், விளை பொருட்களின் தரத்தில் உயர்வு காணப்படும்.

மேலும் இப் பயிற்சி விவசாயிகள் வயலுக்கு சென்று மண் மாதிரி முக்கியத்துவம் குறித்தும் விளக்கம் அளித்து மண் மாதிரி எடுத்து தரப்பட்டது.

இந்த பயிற்சிக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில் நுட்ப மேலாளர் செந்தில்குமார் செய்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# வேளாண் மகளிருக்கான மாற்று வாழ்வாதாரப் பயிற்சி மற்றும் வேளாண் இடுபொருள் வழங்குதல்




கடலூர், ஆக.25

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோவை மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் இணைந்து வேளாண் மகளிருக்கான மாற்று வாழ்வாதாரப் பயிற்சி மற்றும் வேளாண் இடுபொருள் வழங்குதல் விழா நடைபெற்றது. இதில் கடலூர் மாவட்ட ஆறு வட்டாரத்தை சேர்ந்த வேளாண் மகளிர்களுக்கு எண்ணெய் பிழியும் மற்றும் மாவு, மசாலா அரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு அதனை உபயோகப்படுத்தும் முறை மற்றும் பராமரிக்கும் முறையையும் செயல் விளக்கமாக பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன் மற்றும் முனைவர் ரெ.பாஸ்கரன், மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர், இவ்விழாவின் முக்கியத்துவத்தையும் மேலும் எண்ணெய் பிழியும் மற்றும் மாவு, மசாலா அரைக்கும் இயந்திரங்கள் குறித்தும் வலியுறுத்தி வாழ்த்துரை வழங்கினர். முனைவர் சு.கண்ணன், அனைத்து பயிர்களிலும் அறுவடை பின் சார் தொழில்நுட்பங்களும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

கடலையில் விதை உற்பத்தி செய்து அதிகம் லாபம் பெற அறிவுருத்தப்பட்டது. காலநிலை மாற்றத்தின் காரணமாக விவசாயிகள் தொழில் முனைவோர்களாக மாற வேண்டிய கட்டாயத்தை வலியுருத்தி இதில் ஒரு பகுதியாக இத்திட்டத்தின் மூலம் வேளாண் சார்ந்த மகளிர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தில் பும்வீ 51 நெல் விதைகள் பேசிலஸ் போன்ற இடுப்பொருட்கள் விவசாயகளுக்கு வழங்கப் பட்டது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மண் வள மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி




ஈரோடு, ஆக.25

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம், வேளாண்மை – உழவர் நலத் துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் கல்லாகுளம் வருவாய் கிராமத்தில் 25.08.26 அன்று உழவர்களுக்கு மண் வள மேலாண்மை குறித்த பயிற்சி பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் ச.கலைச்செல்வி, தலைமை தாங்கி துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் பயிர் காப்பீட்டுத் திட்டம், வேளாண் கிடங்கில் இருப்பில் உள்ள உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டம் பெற விரும்பும் விவசாயிகள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பற்றி சிறப்புரையாற்றினார்.

இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையம், பிரேமலதா பேசுகையில் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

இயற்கை விவசாயி கணேசன் பேசுகையில் இயற்கை வேளாண்மையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும், மேலும் அங்கக வேளாண்மை செய்வதற்கான வழிமுறைகள் பயிர் சுழற்சி மற்றும் அங்கக இடுபொருள் தயாரிக்கும் முறைகள் (பஞ்சகாவ்யா, அமிர்தகரைசல், ஜீவாமிர்தம், மற்றும் பூச்சி மேலாண்மை, களை மேலாண்மை பற்றிய விவரங்களையும் அவற்றை இயற்கை முறையில் கட்டுப்படுத்தும் முறை குறித்த விவரங்களை எடுத்துரைத்தார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளார்கள் செய்திருந்தனர்.

மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ஷாலினி பேசுகையில், மண் மாதிரி சேகரித்தால், மண் பரிசோதணை செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு மண் வள அட்டைகள் வழங்கப்படும் என்றும் மண் வள அட்டையில் மண்ணின் வகைகள், மண்ணின் அமிலத் தன்மையின் அளவு, எந்த வகை மண்ணிற்கு எந்த வகையான உரங்கள் இட வேண்டும் போன்ற விபரங்கள் இருக்கும் என்பதை பற்றியும் கூறினார். மற்றும் ஒவ்வொரு பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து கொண்டு அதன் அடிப்படையில் உரமிடுதல் குறித்த விவரங்களை எடுத்தரைத்தார். மேலும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விசுவநாதன் மற்றும் தாமோதரன், அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்;டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

## தோவாளை மலரியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் கல்வி சார் கள பயணம் வந்த பள்ளி மாணவர்களுக்கு பயிற்சி

கன்னியாகுமரி, ஆக.25

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் உள்ள தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் மலரியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நெய்யூர் மவுண்ட் லிடெரா பள்ளி மாணவர்கள் 21.08.26 அன்று கல்வி சார் கள பயணமாக வருகை தந்தனர். முனைவர் தி.ராஜ் பிரவின், இணைப் பேராசிரியர் (வேளாண்மை விரிவாக்கம்) வரவேற்புரை வழங்கினார்.

மலரியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் இரா.ஸ்வர்ணபிரியா, தனது தலைமை உரையில் மலர் ஆராய்ச்சி மையத்தின் உயர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள் பற்றி விளக்கி கூறினார். பின்னர் நடந்த கலந்துரையாடல் நிகழ்வில் வினாடி வினாவில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பின்னர் பள்ளி மாணவர்கள் மலர் ஆராய்ச்சி மையத்தில் அமைந்துள்ள மலர் ஆராய்ச்சி திடல்கள், ரோஜா மற்றும் மல்லிகை மரபணு வங்கி, கபிலர் பல்லுயிர் பூங்கா மற்றும் மலர் தோட்டங்களை பார்வையிட்டனர்.

பள்ளி மாணவர்களுக்கு மலர்களில் பூங்கொத்துகள் மற்றும் அலங்காரங்கள் செய்யும் பயிற்சியும் வழங்கப்பட்டது. சுமார் 80 பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இப்பள்ளி சுற்றுலாவில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற விதைப்பரிசோதனை அலுவலர் அறிவுறுத்தல்

தர்மபுரி, ஆக.25

முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுததி அதிக மகசூல் பெறலாம் என விவசாயிகளுக்கு விதைப் பரிசோதனை அலுவலர் இரா.கிரிஜா அறிவுறுத்தியுள்ளார்.

**விதைப்பரிசோதனைகள்**

விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இடுபொருள் விதை தரமான விதைகளை விதைப்பதன் மூலமே அதிக மகசூல் பெறமுடியும். தரமான விதை என்பது விதைச்சான்று துறையினரால் பல கட்டங்களில் வயல் மட்ட ஆய்வு மற்றும் விதைப்பரிசோதனை செய்யப்பட்ட சான்று விதைகளே ஆகும். விதைப்பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன் மற்றும் பிற ரக கலப்பு என்று 4 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புறத்தூய்மை என்பது விதையின் சுத்தத்தை குறிப்பதாகும். அதில் களை விதைகள, பிற பயிர் விதைகள், உயிர்ப்பற்ற பொருள் ஆகியவை பரிசோதிக்கப்படுகிறது. ஈரப்பதம் என்பது பயிர் வாரியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் பகுப்பாய்வு முடிவுகள் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாக இருந்தால் அதிக பூச்சி தாக்குதல் மற்றும் நுண்ணுயிர் தாக்குதலுக்கு உட்பட்டு விதையின் தரம் குறைய வாய்ப்புள்ளது. முளைப்புத்திறன் பரிசோதனையில் விதை மாதிரிகளின் முளைப்புத்திறன் பரிசோதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு விதைக்கும் தரமான விதைக்கான குறிப்பிட்ட சதவீதம் முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முளைப்புத் திறன் குறைந்தால் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிக்கும்.

**விதை மாதிரிகளின் அளவு**

ஆய்வு செய்யக்கூடிய மாதிரியின் அளவு நெல், சோளம்-100 கிராம், உளுந்து-150 கிராம், நிலக்கடலை, மக்காச்சோளம்-500 கிராம், கம்பு, ராகி, சாமை, தினை, குதிரைவாலி-25 கிராம், கத்தரி, முள்ளங்கி, மிளகாய்-10 கிராம், பாகற்காய், புடலங்காய்-250 கிராம், சாம்பல் பூசணி, சுரைக்காய், தர்பூசணி-100 கிராம்,

பீன்ஸ், அவரை-450 கிராம் ஆகிய அளவில் எடுத்து பரிசோதனை கட்டணம் ரூ.80/- மற்றும் தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்துடன் விவசாயிகள், விதை விற்பனை யாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளின் தரத்தை அறிய விதைப் பரிசோதனை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், மாவட்ட ஆட்சியரகம் பின்புறம், தர்மபுரி என்ற முகவரிக்கு அனுப்பி விதையின் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமாறு விதை பரிசோதனை அலுவலர் இரா.கிரிஜா கேட்டுக்கொள்கிறார்.




# சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் பயிற்சி



திருவள்ளூர், ஆக.25

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டாரம் வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் கடம்பத்தூர் வட்டாரத்தில் உள்ள கூவம் கிராமத்தை சார்ந்த 40 விவசாயிகளுக்கு சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத்திறனை அதிகரித்தல் என்ற தலைப்பின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கு வேளாண் அறிவியல் நிலைய முனைவர் யோகமீனாட்சி மற்றும் வேளாண்மை துணை அலுவலர் மா.ரமேஷ் தலைமை தாங்கி பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார்.

**மண் ஆரோக்கியத்தின் முக்கிய அம்சங்கள்**

சமச்சீரான உரப் பயன்பாடு என்பது, மண் பரிசோதனைகளின் அடிப்படையில் பேரூட்டச்சத்துக்களையும் நுண்ணூட்டச் சத்துக் களையும் சரியான அளவிலும் விகிதத்திலும் இடுவதாகும். உரப் பயன்பாட்டுத் திறன் (FUE) என்பது, இடப்பட்ட ஊட்டச்சத்துக்களில் எவ்வளவு பயிரால் உண்மையில் உறிஞ்சப்படுகிறது என்பதை அளவிடுகிறது. சமச்சீரான பயன்பாடு, எந்தவொரு ஊட்டச்சத்தும் விடுபடாமல் தாவர வளர்ச்சியைத் தடுக்காமலும் வீணாக் காமலும் இருப்பதை உறுதி செய்வதன் மூலம், உரப் பயன் பாட்டுத் திறனை நேரடியாக அதிகரிக்கிறது.

**சமச்சீரான உரப் பயன்பாடு**

**மண் பரிசோதனை :** யூகத்தின் அடிப்படையில் அல்லாமல், துல்லியமான உள்ளூர் மண் அறிக்கைகளின் அடிப்படையில் ஊட்டச்சத்துக்களை இடவும்.

**சரியான விகிதங்கள் :** நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் (NPK) மற்றும் துத்தநாகம் அல்லது போரான் போன்ற நுண் ணூட்டச் சத்துக்களை சரியான விகிதங்களில் வழங்குங்கள்.

**ஒருங்கிணைந்த பங்களிப்புகள் :** மண் உயிரினங்களைப் பாதுகாக்க, இரசாயன உரங்களுடன் இயற்கை உரங்கள் அல்லது உயிர் உரங்களைச் சேர்த்துப் பயன்படுத்தவும்.

**சரியான நேரத்தில் இடுதல் :** பயிரின் குறிப்பிட்ட வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்ற ஊட்டச்சத்துக்களை இடவும்.

**உரப் பயன்பாட்டுத் திறன் (FUE)**

**வரையறை :** இடப்பட்ட ஊட்டச்சத்துக்களில், தாவரம் எடுத்துக் கொண்டு பயன்படுத்திக்கொள்ளும் ஊட்டச்சத்துவின் சதவிகிதம்.

**இழப்புக் குறைப்பு :** குறைந்த FUE என்பது ஊட்டச்சத்துக்கள் நீர் நிலைகளுக்குள் அடித்துச் செல்லப்படுகின்றன அல்லது காற்றில் கலந்துவிடுகின்றன என்பதாகும்.

**குறிப்பிட்ட இடத்தில் இடுதல் :** உரங்களை மேற்பரப்பில் பரவலாகப் பரப்புவதற்குப் பதிலாக, வேர்ப் பகுதிக்கு அருகில் இடவும்.

**பிரித்துக் கொடுத்தல் :** நீர் மற்றும் பயிர் உறிஞ்சும் சுழற்சிகளுக்கு ஏற்றவாறு, நைட்ரஜனைப் பிரித்துக் கொடுக்கவும்.

மேலும் துணை வேளாண்மை அலுவலர் மா.ரமேஷ், பேசுகையில் பசுந்தாள் உரங்களான சணப்பை, தக்கைப்பூண்டு போன்ற பயிர்களை வளர்த்து, பூக்கும் பருவத்திற்கு முன் மண்ணில் உழுதுதல் வேண்டும் என்றும் உயிர் உரங்களான



அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டிரியா, அசோட்டோ பாக்டர் போன்றவற்றை பரிந்துரைக்கப்பட்ட முறையில் பாதுகாத்தல், அறுவடைக்குப் பின் கிடைக்கும் தாவர கழிவுகளை எரிக்காமல் மக்கச் செய்து மண்ணில் சேர்த்தல் என்றும் தொழில் நுட்பங்களை எடுத்து கூறினார். நுண்ணூட்டச் சத்து உரங்களை துத்துநாகம், போரான், இரும்பு போன்று நுண்ணூட்டச் சத்துகளை இட வேண்டும் என்று எடுத்து கூறினார்.

வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் நெல் இரகங்களான கோ 51, CR Dhan 205, கோ 58, ADT 58, கோ 59 இரங்கள் மற்றும் பச்சைப்பயறு VIRAT 205, கோ 9 மற்றும் நுண்ணூட்ட உரங்கள் எக்டேருக்கு 12.5 கிலோ மற்றும் அனைத்து பயிர்களுக்கு திரவ உயிர் உரங்கள் (50 சதவிதம் மானியத்தில்) போன்ற இடுபொருட்களின் இருப்பு விபரங்கள் பற்றிக் கூறினார்.

விவசாயிகள் தங்கள் நிலங்களில் குறைந்த அளவில் நீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவதற்கான தொழில் நுட்பங்களான சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்பாசனம் திட்டம் குறித்து எடுத்து கூறினார்.

மேலும், உதவி தொழில்நுட்ப மேலாளர் வே.அன்பு பேசுகையில், வேளாண் அடுக்ககத்தில் பதிவு செய்யாத விவசாயிகள் பதிவு செய்யவும் மேலும் உட்பிரிவுகளை இணைக்காத விவசாயிகள் உட்பிரிவுகளை இணைக்கவும் கேட்டுக் கொண்டார்.

இந்த பயிற்சியில் கலந்துக்கொண்ட அனைத்து விவசாயி களுக்கும் சிறுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டது. வேளாண் கண்காட்சியாக உயிர் உரங்கள், நெல், நுண்ணூட்ட கலவைகள், பார்வைக்கு வைக்கப்பட்டு அதன் முக்கியத்து வத்தினை பற்றியும் உயிர் உரத்தின் மூலம் விதை நேர்த்தி செய்தல் குறித்தும் வெ.இளையராஜா உதவி தொழில்நுட்ப மேலாளர் எடுத்து கூறினர். மேலும் இந்த பயிற்சிக்கு கருத்துக்காட்சிக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஏற்பாடு செய்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# விவசாயத்தில் மதிப்புக் கூட்டுதல் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல்

அறிமுகம்

இந்தியாவின் பொருளாதாரத்திலும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திலும் வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது. இருப்பினும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களுக்கு பல நேரங்களில் எதிர்பார்த்த விலை கிடைப்பதில்லை. குறிப்பாக பழங்கள், காய்கறிகள் மற்றும் மலர்கள் போன்ற அழுகக்கூடிய பொருட்களில் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் அதிகமாக உள்ளன. இதனால் விவசாயிகளின் வருமானம் குறைகிறது.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு சிறந்த தீர்வாக மதிப்புக் கூட்டுதல் அமைகிறது. வேளாண் விளைபொருட்களை மூலப்பொருளாக விற்பனை செய்வதற்குப் பதிலாக, சுத்தம் செய்தல், தரம் பிரித்தல், உலர்த்துதல், பதப்படுத்துதல், பேக்கிங் மற்றும் பிராண்டிங் போன்ற செயல்முறைகள் மூலம் அதன் சந்தை மதிப்பை அதிகரிப்பதே மதிப்புக் கூட்டுதல் ஆகும்.



## மதிப்புக் கூட்டுதல் என்றால் என்ன?

ஒரு வேளாண் பொருளின் தரம், பயன்பாடு, சேமிப்பு காலம் மற்றும் சந்தை மதிப்பை அதிகரிக்கும் செயல்முறையே மதிப்புக் கூட்டுதல் ஆகும். உதாரணமாக, தக்காளியை நேரடியாக விற்பனை செய்வதற்குப் பதிலாக தக்காளி சாஸ் அல்லது ப்யூரியாக மாற்றலாம். வாழைப்பழத்தை சிப்ஸ் அல்லது மாவாகவும், மஞ்சளைப் பொடியாகவும், மிளகாயை தரமான மசாலாப் பொருளாகவும் மாற்றி விற்பனை செய்யலாம்.

இதன் மூலம், விவசாய உற்பத்தி – தரம் பிரித்தல் – பதப்படுத்துதல் – பேக்கிங் – பிராண்டிங் – சந்தைப்படுத்தல் – அதிக வருமானம் என்ற மதிப்புச் சங்கிலியை உருவாக்க முடியும்.



## மதிப்புக் கூட்டுதலின் முக்கியத்துவம்

மதிப்புக் கூட்டுதல் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதுடன்

அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளையும் குறைக்கிறது. பதப்படுத்தப்பட்ட பொருட்களின் சேமிப்பு காலம் அதிகமாக இருப்பதால், அறுவடை காலத்தில் ஏற்படும் விலை வீழ்ச்சியின் தாக்கத்தைக் குறைக்க முடியும். பழங்கள் மற்றும் காய்கறிகளில் ஜாம், ஜூஸ், சாஸ், ஊறுகாய் மற்றும் உலர் பொருட்களை தயாரிக்கலாம். சிறுதானியங்களில் மாவு, ரெடி-டு-குக் உணவுகள் மற்றும் ஆரோக்கிய உணவுப் பொருட்களை உருவாக்கலாம். மஞ்சள், மிளகாய், இஞ்சி, பூண்டு போன்றவற்றை சுத்தம் செய்து, உலர்த்தி, பொடியாக்கி தரமான பேக்கிங்கில் விற்பனை செய்யலாம்.



## FPO-க்களின் பங்கு

சிறு மற்றும் குறு விவசாயிகளால் தனியாக பதப்படுத்தும் தொழிற்சாலை களை அமைப்பது சிரமமாக இருக்கலாம். இதற்கு விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்புகள் சிறந்த தீர்வாக அமைகின்றன. விவசாயிகள் ஒன்றிணைந்து தங்களுடைய விளை பொருட் களை சேகரித்து, தரம் பிரித்து, பதப்படுத்தி, ஒரே பிராண்டின் கீழ் சந்தைப்படுத்த முடியும். இதன் மூலம் பதப்படுத்தும் செலவு குறைவதுடன், அதிக அளவில் பொருட் களை சந்தைப்படுத்தும் திறனும் அதிகரிக்கும். தமிழ்நாட்டிலும் வேளாண் சந்தைப் படுத்தல் மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலம் FPநுக்கள் மற்றும் வேளாண் மதிப்புச் சங்கிலியை மேம்படுத்து வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.



## சேமிப்பு மற்றும் பதப்படுத்துதல்

மதிப்புக் கூட்டுதலுக்கு குளிர்சாதனக் கிடங்குகள், உலர்த்தும் அலகுகள் மற்றும் தரம் பிரிக்கும் வசதிகள் முக்கிய மானவை. இவை அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்து, விளைபொருட்களை நீண்ட காலம் தரமாகச் சேமிக்க உதவுகின்றன. விவசாயிகள் தங்களுடைய பகுதியில் கிடைக்கும் முக்கிய விளைபொருட்களை அடிப்படையாகக் கொண்டு சிறிய அளவிலான பதப்படுத்தும் அலகுகளை உருவாக்கலாம். இதன் மூலம் உள்ளூர் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.

## சந்தைப்படுத்தல் மற்றும் பிராண்டிங்

மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரிப்பதுடன் அவற்றை சரியான சந்தையில் விற்பனை செய்வதும் அவசியமாகும்.



தரமான பேக்கிங், லேபிளிங், பிராண்டிங் மற்றும் சரியான விலை நிர்ணயம் ஆகியவை பொருளின் சந்தை மதிப்பை உயர்த்துகின்றன. உழவர் சந்தைகள், உள்ளூர் சந்தைகள், சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் ஆன்லைன் விற்பனை தளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகள் நேரடியாக நுகர்வோரை அணுக முடியும். இதனால் இடைத்தரகர்களின் எண்ணிக்கை குறைந்து, விவசாயிகளுக்குக் கிடைக்கும் வருமானம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

## இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான வாய்ப்புகள்

மதிப்புக் கூட்டுதல் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குகிறது. சிறுதானிய உணவுகள், ஊறுகாய், மசாலாப் பொருட்கள், உலர் காய்கறிகள், பழப் பொருட்கள் போன்றவற்றை சிறிய அளவில் தயாரித்து விற்பனை செய்ய முடியும். இதன் மூலம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட சிறு மற்றும் குறு தொழில்கள் உருவாகி, கிராமப்புற வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.

**முடிவுரை :** விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்கு உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமல்லாமல், உற்பத்தி செய்யப் பட்ட பொருட்களுக்கு கூடுதல் மதிப்பை உருவாக்குவதும் அவசியமாகிறது. மதிப்புக் கூட்டுதல் மூலம் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை குறைத்து, விளைபொருட்களின் சேமிப்பு காலத்தை அதிகரித்து, புதிய சந்தைகளை உருவாக்க முடியும். சிறு பதப்படுத்தும் அலகுகள், குளிர்சாதனச் சேமிப்பு, தரம் பிரித்தல், பேக்கிங், பிராண்டிங் மற்றும் டிஜிட்டல் சந்தைப் படுத்தல் ஆகியவற்றை ஒருங்கிணைத்தால் விவசாயிகள் மூலப்பொருள் உற்பத்தியாளர்களிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் தொழில் முனைவோர்களாக மாற முடியும்.

உற்பத்தி செய்வோம் – மதிப்புக் கூட்டுவோம் – சந்தைப்படுத்து வோம் – வருமானத்தை உயர்த்துவோம்.

கட்டுரை ஆசிரியர் : **Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@ gmail.com**



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741